


**23. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நீட் வழக்குகளை விசாரிக்க, விரைவு நீதிமன்றங்கள் அமைத்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது உறுதி செய்யப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தொிவித்துள்ளார்.

2. நீட் தேர்வை ரத்து செய்வதற்கு உரிய தருணம் இது என்று தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. சுதந்திர போராட்ட தியாகி சுப்ரமணிய சிவாவின் 101-வது நினைவு தினத்தை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

4. மாஞ்சோலை தேயிலை தோட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னிஅரசு கூறியுள்ளார்.

5. இந்தியா - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - நீட்

நாட்டின் இளைஞர்களின் நலனும், எதிர்காலமுமே அரசின் உயர் முன்னுரிமை என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி உறுதிபட தொிவித்துள்ளார்.

நீட் நுழைவுத்தேர்வு தொடர்பான வழக்குகளை துரிதமாக விசாரிக்க விரைவு நீதிமன்றங்கள் அமைத்து குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருப்பதாகவும் கூறினார்.

இளையோரின் எதிர்காலத்திற்கு ஊறு விளைவிக்க முயல்வோரை அரசு ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது என்றும் தொிவித்தார்.

மாணாக்கரின் நலன்களை பாதுகாக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சியினரின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா இன்று கேள்வி நேரத்தை எடுக்க முற்பட்ட போது, நீட் மற்றும் மாணவர் போராட்ட பிரச்சனைகளை எதிர்கட்சியினர் எழுப்பினர்.

கேள்வி நேரத்தில் வேறு எந்த விஷயத்தையும் யாரும் பேச அனுமதி அளிக்கப்படாது என்று கூறிய அவைத் தலைவர், நீட் பிரச்சனையில் விவாதத்திற்கு தயார் என்று ஏற்கனவே அரசு உறுதியளித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் கோரினார்.

ஆனால் எதிர்கட்சியினர் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே மக்களவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் இரண்டு மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்தது.

நீட் பிரச்சனையில் எதிர் கட்சியினர் குரல் எழுப்பிய போது, பேசிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு மத்திய அரசு நீட் குறித்த பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்தும் காங்கிரஸ் கட்சி நிபந்தனைகளை விதிப்பதாக குறை கூறினார்.

நீட் தேர்வு விவகாரத்தை அரசியலாக்க கூடாது என்று வலியுறுத்திய அவர், இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விரிவான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தார்.

வினாத்தாள் கசிவுக்கு காரணமானவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே நிபந்தனைகள் விதிப்பதை விட்டுவிட்டு இதுதொடர்பான விவாதம் இன்று நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று திரு. கிரண் ரிஜிஜு கோரினார்.

இவ்விவகாரத்தில் மத்திய கல்வியமைச்சர் பதவி விலகும் வரை விவாதம் நடைபெறாது என்று எதிர்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

இதனால் நிலவிய அமளியால் மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக பலத்த மழை, வெள்ளம், நிலச்சரிவு, பேரிடர்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உயி◌ா◌ிழந்தவர்களுக்கு மாநிலங்களவையில் இரங்கல் தொ◌ிவிக்கப்பட்டது.

இயற்கை பேரிடர்கள் பெரும் சேதத்தை விளைவித்து உள்ளதாக கூறிய அவைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன், சம்மந்தப்பட்ட மாநில அரசுகள், தேசிய பேரிடர் மீட்பு படையினருடன் இணைந்து மீட்பு நிவாரண நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவையில் சிறிது நேரம் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

ஸ்டாலின்

நீட் தேர்வை ரத்து செய்வதற்கான உரிய நேரம் இது என்று தி.மு.க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

நீட் தேர்வு சமத்துவமின்மையை குறைப்பதற்கு பதிலாக பள்ளி கல்வி முறையிலிருந்து, பயிற்சி மையங்களுக்கு இடம்பெயர்ந்ததாக குற்றம் சாட்டினார்.

பள்ளி கல்வி சார்ந்த திறன் மதிப்பீட்டிலிருந்து பயிற்சி மைய தேர்வு தொழில்நுட்பங்களுக்கு நீட் தேர்வு சென்று விட்டதாகவும் குறைகூறியுள்ளார்.

மாநிலங்கள் மீதும், அதன் பள்ளிகள் மீதும், அதில் பயிலும் மாணாக்கர்களின் மீதும் நம்பிக்கை வைப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுமையை குறைப்பது, வர்த்தகமயமாக்கலை நீக்குவது, மாணாக்கரின் தரத்தை உயர்த்துவது என்ற மூன்று நோக்கங்களுடன் கொண்டு வரப்பட்ட நீட் தேர்வு அதிலிருந்து நீர்த்து விட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு திறந்த மனதுடன் இதுகுறித்த விவாதங்களை மேற்கொண்டு நீட் தேர்வை ரத்து செய்வதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

நீட் தேர்விற்கு எதிராக மாணாக்கரை காங்கிரஸ் கட்சி தவறாக வழிநடத்துவதாக பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் காங்கிரஸ் தலைமையகத்தின் முன்பு இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர், தேச நலன்களுக்கு எதிராக மாணாக்கரை காங்கிரஸ் திசை திருப்புவதாக குறை கூறியுள்ளார்.

தேசத்திற்கு எதிராக போராடுபவர்களுடன் மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி கைகோர்த்து இருப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

நீட் மெரினா

நீட் தேர்வுக்கு எதிராக இளைஞர்கள், மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்து வரும் நிலையில், முன்னெச்சரிக்கை கருதி சென்னை மெரினா கடற்கரைக்கு செல்ல பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரையிலான அனைத்து நுழைவு வாயில்களும் மூடப்பட்டுள்ளதோடு, இரண்டு துணை ஆணையர்கள் தலைமையில் 200-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது 3 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டமாக ரொமேனியாவில் இன்றுமுதல் 2 நாள் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார்.

அந்நாட்டு அதிபர் Nicusor Dan உடனான இருதரப்பு பேச்சுவார்த்தையை அடுத்து பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

குடியரசு தலைவர் நாளை இந்தியா - ரொமேனியா வர்த்தக மாநாட்டில் உரை நிகழ்த்தவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

சுப்ரமணிய சிவா

சுதந்திர போராட்ட வீரர் தியாகி சுப்ரமணிய சிவாவின் 101-வது நினைவு தினத்தை ஒட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் அன்னாருக்கு மலரஞ்சலி செலுத்தியுள்ளார்.

வந்தேமாதரம் என்ற தேசபக்தி முழக்கத்தின் மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை விதைத்தவர் தியாகி சுப்ரமணிய சிவா என புகழாரம் சூட்டினார்.

தர்மபுரி மாவட்டம் பாப்பாரபட்டியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் அரசு சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சரவணன் இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

தேசிய ஒலிபரப்பு தினம்

தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

1927-ம் ஆண்டு இதே நாளில் வானொலி ஒலிபரப்பு சேவை முதல்முறையாக தொடங்கப்பட்ட நிலையில், 1936-ம் ஆண்டு All India Radio என்று பெயர் மாற்றம் கண்டு தற்போது ஆகாஷவாணி என்று அழைக்கப்பட்டு வருகிறது.

வேளாண்மை, கல்வி, விளையாட்டு, உயர்கருத்துக்கள் உள்ளிட்டவற்றை வானொலி வழங்கிவரும் நிலையில் மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை இதன்மூலம் அறிந்துகொள்ள முடிவதாக ராணிப்பேட்டையை சேர்ந்த விவசாயி தொ◌ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

வன்னிஅரசு

நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டுமென்று மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னிஅரசு கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாஞ்சோலை தேயிலை தோட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகள் முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

மாஞ்சோலை

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை தேயிலை தோட்ட தொழிலாளர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு தாமிரபரணி ஆற்றில் பல்வேறு அரசியல் கட்சியினர் இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖

சாகர் கவாச் வாய்ஸ்

நாகை மாவட்டம் வேதாரண்யம் கடலோர பகுதிகளில் தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுப்பதற்கான சாகர் கவாச் பாதுகாப்பு ஒத்திகை இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

ஆற்காட்டுத்துறை கடற்பகுதியில் வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழுவினர் இந்த ஒத்திகையை முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

MBBS BDS

தமிழகத்தில் MBBS BDS மருத்துவ படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கு விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசம் இன்றுமாலை 5 மணியுடன் நிறைவடைகிறது.

❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதை அடுத்து, திருச்சி மண்டல தலைமை பொறியாளர் ஜெயகுமாரி தலைமையில் நீர்வளத் துறை அதிகாரிகள் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

அணையில் வைக்கப்பட்டுள்ள கருவிகளின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்ததோடு, இடது கரையில் 16 கண் பாலத்தில் வளைவுகளை வலுப்படுத்தும் பணியையும் இக்குழு பார்வையிட்டது.

❖❖❖❖❖❖❖❖

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தில் இதுவரை பதிவு செய்யாதவர்களுக்கான சிறப்பு முகாம்கள் வரும் 28-ம் தேதிமுதல் ஆகஸ்ட் 6-ம் தேதிவரை நடைபெற உள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

நான்கு இடங்களில் இம்முகாம் நடைபெற உள்ளது

❖❖❖❖❖❖❖❖

நாட்டுக்கோழி வளர்ப்பு

திருச்சி கொட்டப்பட்டு கால்நடை பல்கலைக்கழக பயிற்சி ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த கட்டண பயிற்சி வரும் 13-ம் தேதி நடைபெறுகிறது.

விருப்பமுள்ளவர்கள் கட்டணம் செலுத்தி முன் பதிவு செய்து கொள்ளலாம் என்று இம்மையத்தின் தலைவரும், பேராசிரியருமான டாக்டர் சிபி தாமஸ் தொிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்தியா - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி இன்றுமாலை நான்கரை மணிக்கு ஹராரேயில் நடைபெறுகிறது.

ஸ்ரேயஸ் அய்யர் தலைமையில் இந்திய அணி இதில் களமிறங்குகிறது.

இரு அணிகளுக்கு இடையேயான இரண்டாவது போட்டி வரும் சனிக்கிழமையும்,

3-வது 20-20 இறுதிப்போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமையும் ஹராரேயில் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

Changzhou-வில் நடைபெறும் சீன ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் லக்ஷ்யா சென், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖